# தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி

## நாகப்பட்டினம் மாவட்டம்

**ந.க.எண்: 392/2022/அ1** **நாள்: 22.06.2022**

**இரு உறை முறை ஒப்பந்தப்புள்ளி (Two cover system)**

நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு பேரூராட்சியில் கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் (KNMT) 2022– 2023 கீழ் பணிகள் மேற்கொள்ள கீழ்காணும் விவரபடி ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

> தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம்–1998 பிரிவு 16.ஈ மற்றும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள்–2000 விதிஎண்.33 கீழ் குறைந்த கொள்முதல் மதிப்பு விலக்கு பெறுகிறது.
>
> தமிழ்நாடு அரசாணை எண்.103 நிதி (சம்பளம்) துறை, நாள் 11.04.2022–ன் படி கொள்முதல் மதிப்பு ரூ.25.00 லட்சத்திற்கும், கட்டுமான மதிப்பு ரூ.50.00 லட்சத்திற்கும் குறைவு என்பதால் நாளிதழ் விளம்பரத்திலிருந்து விலக்கு பெறுகிறது.

| | |
|---|---|
| ஒப்பந்தப்புள்ளி எண் | 392/2022/அ1 |
| ஒப்பந்தப்புள்ளிவரவேற்கும் அலுவலர்/அமைப்பின் பெயர் | செயல் அலுவலர்,<br>தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி,<br>நாகப்பட்டினம் மாவட்டம். |
| திட்டத்தின் பெயர் | கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் (KNMT) 2022– 2023 |
| பணியின் பெயர் | தலைஞாயிறு பேரூராட்சிக்கு சொந்தமான வண்டல் குளம் புத்தாக்க பணி மேற்கொள்ளுதல் (Rejuvenation of Water Bodies - Vandal Kulam Ward No.15, Survey No.305) |
| மதிப்பீடு | ரூ.49.20 இலட்சம் |
| ஒப்பந்தப்புள்ளி நமூனா நேரில் பெற்றுக்கொள்ள கட்டணம் | ரூ.9000 +1620 (GST 18%) |
| ஒப்பந்தப்புள்ளி நமூனா கிடைக்கும் இடம் மற்றும் நாள் | 22.06.2022முதல் 12.07.2022 மாலை 3மணி வரை தலைஞாயிறு பேரூராட்சி அலுவலகத்தில் கிடைக்கும் (அல்லது) https://tntenders.gov.in. http://townpanchayats.tn.gov.in/tender என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| முன்வைப்பு தொகை | ரூ.49200/– |
| ஒப்பந்தப்புள்ளி குறித்த விளக்க கூட்டம் இடம் மற்றும் நாள் | நாள்.27.06.2022 காலை 11.00 மணி<br>தலைஞாயிறு பேரூராட்சி அலுவலகம். |
| நிரப்பிய ஒப்பந்தப்புள்ளி அளிப்பதற்கான கடைசி நாள் மற்றும் இடம் | நாள்.12.07.2022 பிற்பகல் 3.00 மணி<br>தலைஞாயிறு பேரூராட்சி அலுவலகம். |
| தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறப்பு நாள் மற்றும் இடம் | நாள்.12.07.2022 பிற்பகல் 3.30 மணி<br>தலைஞாயிறு பேரூராட்சி அலுவலகம் |
| தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு நாள் | தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி 13.07.2022<br>பேரூராட்சிகள் உதவி இயக்குநரகம் தஞ்சாவூர் |
| விலை ஒப்பந்தப்புள்ளி திறப்பு நாள் மற்றும் இடம் | தேர்வு செய்யப்பட்ட தகுதியான ஒப்பந்தக்காரர்களின் விலைப்புள்ளி மட்டும் 14.07.2022 அன்று தலைஞாயிறு பேரூராட்சி அலுவலகத்தில் காலை 11.00 மணிக்கு திறக்கப்படும். |
| பணி முடிவு காலம் | 6 மாதங்கள் |
| பழுது நீக்க பராமரிப்பு காலம் | 3 ஆண்டுகள் |

**<u>ஒப்பந்ததாரர் தகுதிநிலை:</u>**

1. தலைஞாயிறு பேரூராட்சியில் பதிவு செய்து **2022–2023** நிதிஆண்டுக்கு புதுப்பிக்கப்பட்டு பதிவு நடப்பில் உள்ள இரண்டாம் நிலை (Class-II) நிலைக்கு குறையாத ஒப்பந்ததாரர். புதிய ஒப்பந்ததாரர் பொறுத்த வரையில் தமிழ்நாடு அரசு துறை/நிறுவனம்/ வாரியம்/உள்ளாட்சிகளில் பதிவு செய்து **2022–2023** நிதி ஆண்டுக்கு புதுப்பிக்கப்பட்டு ரூ.**31.00** லட்சம் முதல் ரூ.**75.00** லட்சம் வரையிலான மதிப்பீடு ஒப்பந்தப்புள்ளிக்கு தகுதி பெற்ற ஒப்பந்ததாரர்கள் விண்ணப்பிக்கலாம். எனினும் தலைஞாயிறு பேரூராட்சிக்கு ஒப்பந்ததாரர் பதிவுக்கட்டணம் செலுத்த வேண்டும்.

2. குறைந்த பட்சம் கடந்த ஐந்து நிதி ஆண்டுகள் கட்டுமான துறையில் இருப்பதற்கான பட்டய கணக்காளரால் தணிக்கை செய்யப்பட்ட Balance Sheet நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.

3. கடந்த மூன்று நிதி ஆண்டுகளாக திட்டப்பணி மதிப்பீட்டில் **50%** தொகைக்கு குறையாமல் Turn Over செய்தமைக்கான பட்டய தணிகையாளர் சான்று இணைக்கப்பட வேண்டும்.

4. கடந்த மூன்று நிதி ஆண்டுகளில் ஏதாவது ஒரு ஆண்டிலாவது திட்டப்பணி மதிப்பீட்டில் **50%** தொகைக்கு குறையாத மதிப்பீட்டில் ஒரே பணியாக அரசு துறை/ கழகங்கள்/ வாரியம்/உள்ளாட்சிகளில் சாலைப்பணி செய்தமைக்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.

5. ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நாளில் திட்டப்பணி மதிப்பீட்டில் **15%** குறையாத Working Capital தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் ரொக்கமாக இருப்பதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.

6. ஒப்பந்ததாரர் தொழில் நுட்ப கல்வி தகுதி B.E அல்லது இணையான தகுதி பெற்றிருக்க வேண்டும். அல்லது உரிய தொழில் நுட்ப பணியாளர்களை பணி அமர்த்துவதற்கான சான்று இணைக்கப்பட வேண்டும்.

7. தலைஞாயிறு பேரூராட்சி அல்லது அரசு துறை/ கழகங்கள்/ வாரியங்கள்/ உள்ளாட்சி அமைப்புகளில் 'கருப்பு பட்டியல்' கொண்டு வரப்பட்ட ஒப்பந்ததாரர் விண்ணப்பிக்க இயலாது.

8. வருமான வரி நிரந்தர கணக்கு எண் (PAN) பெற்றவராக இருக்க வேண்டும். 2022-2023 AY 2021-2022 FY வரை வருமான வரி அறிக்கை தாக்கல் செய்த நகல் இணைக்க வேண்டும்.

9. சரக்கு சேவைவரி கணக்கு எண் (GSTIN) பெற்றவராக இருக்க வேண்டும். **2020–2021** வரை அறிக்கை தாக்கல் செய்தவராகவும் நடப்பு ஆண்டில் மே–**2022** மாதம் வரை அறிக்கை தாக்கல் செய்த நகல் இணைக்க வேண்டும்.

10. பட்டியல் தொகை ECS மூலம் பெற்றுக்கொள்ள ஏதுவாக தேசியமயமாக்கப்பட்ட வங்கி கணக்கு புத்தக ஒளி நகல் இணைக்க வேண்டும்.

11. ஒப்பந்ததாரர் சொந்தமாக வைத்திருக்க வேண்டிய அல்லது உரிய ஏற்பாடு செய்திருக்க வேண்டிய கருவிகள்/தளவாட பொருட்கள்/ஆலைகள்/இயந்திரங்கள்/ வாகனங்கள்.

| | | |
|---|---|---|
| 1 | Centering Materials | 500 Sq.m. |
| 2 | Water Lorry | 1 No. |

12. Joint Venture மற்றும் Subcontract அனுமதிக்கப்பட மாட்டாது.

**ஒப்பந்தப்புள்ளிகள் நிரப்பி அளிக்கும் முறை**

1. "Technical Bid " படிவங்கள் சான்றுகள் ஒரு உள் உறையில் வைக்கப்பட்டு Technical Bid என எழுதப்பட்டு மூடி முத்திரையிடப்பட வேண்டும்.
2. "Price Bid "படிவங்கள் சான்றுகள் ஒரு உள் உறையில் வைக்கப்பட்டு Price Bid என எழுதப்பட்டு மூடி முத்திரையிடப்பட வேண்டும்.
3. இரண்டு உள் உறைகளும் ஒரு பெரிய உறையினுள் வைக்கப்பட்டு மூடி முத்திரையிடப்பட வேண்டும்.
4. இரண்டு உள் உறைகள் மற்றும் பெரிய வெளி உறையில் குறிப்பிடப்பட வேண்டியவை:

(a) be addressed to the Employer at the following address:
The Executive officer,
Thalanayar Town Panchayat

(b) bear the following identification:

"Rejuvenation of Water Bodies - Vandal Kulam Ward No.15, Survey No.305 at Thalanayar Town panchayat"

- Bid Reference No.392 / 2022/a1
- DO NOT OPEN BEFORE **3.30 PM** on **12.07.2022**

5. மேலும் ஒப்பந்ததாரரின் தெளிவான முகவரி குறிப்பிட வேண்டியவை

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு கடிதம்**

பொதுவாக குறைந்த விலைப்புள்ளி அளித்த நிறுவனத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏற்பு கடிதம் அளிக்கப்படும்.

**பிணையத் தொகை 2%**

வெற்றி பெற்ற ஒப்பந்ததாரர் முன்வைப்பு தொகை 1% பிணையத் தொகையாக மாற்றப்படும் மீதம் 1% தொகை ஒப்பந்ததாரர் பணி ஆணை பெறும் முன் செலுத்த வேண்டும் 15 நாட்களுக்குள் செலுத்த தவறினால் முன்வைப்பு தொகை பறிமுதல் செய்யப்படும்.

**பணி ஆணை**

பிணையத் தொகை செலுத்திய பின் பணி ஆணை வழங்கப்படும் பணி ஆணையில் குறிப்பிடும் நிபந்தனைகளுக்கு ஒப்பந்ததாரர் கட்டுப்பட வேண்டும்.

**ஒப்பந்த பத்திரம்**

பணி ஆணையில் கண்டுள்ள நிபந்தனைகளை ஏற்பதாக ரூ.20/– க்கான நீதி மன்ற முத்திரைதாளில் எழுதி பதிவு செய்யப்பட வேண்டும்.

**பணிகள் முன்னேற்றம்**

ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு சரியான கால இடை வெளியில் பணிமுன்னேற்றம் காண்பிக்க வேண்டும். தவறினால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**<u>பட்டியல் பிடித்தங்கள்</u>**

1. வருமான வரி TDS தனிநபர் 1%
   வருமான வரி TDS பிறர் 2%
2. சரக்கு சேவை வரி TDS 2%
3. கட்டுமான தொழிலாளர் நல சந்தா மதிப்பீட்டு தொகை 1%
4. தொழில் வரி ஆண்டுக்கு ரூ.2500/–
   (மேற்காணும் பிடித்தங்களில் மாற்றம் ஏற்படின் அதற்கு ஏற்ப பிடித்தம் செய்யப்படும்)
5. With held 5%
6. Defect Liability deposit 2.5%

| |
|---|
| பகுதி / முழுமை பட்டி(Bill) பொறியாளரால் தயாரிக்கப்பட்டு அளவீடு, மேல் அளவீடு செய்யப்பட்டு தேவையானநேர்வில் மூன்றாம் நபர் ஆலோசகர் அறிக்கை (Third party consultant) பெறப்பட்டு **திட்டநிதி** வரப்பெற்ற பிறகே ஒப்பந்ததாரர் வங்கி கணக்கில் மின்னனு பரிவர்த்தனை முறையில் விடுவிக்கப்படும்.<br>1. மேற்காணும் நடைமுறையில் தாமதம் ஏற்படின் வட்டித்தொகை / நிதி இழப்பீடு வழங்க வழிவகை இல்லை.<br>2. திட்டநிதி வரப்பெற்றவில்லை எனில் வேறு நிதி ஆதாரத்திலிருந்து பட்டி தொகை விடுவிக்க இயலாது. |

**<u>பொது</u>**

1. ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையின் எந்த ஒரு நிலையிலும் காரணம் குறிப்பிட்டோ காரணம் குறிப்பிடாமலோ ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கையினை திருத்தம் செய்திட/மாற்றி அமைத்திட/ஒத்தி வைத்திட/ இரத்து செய்திட/ ஒப்பந்தப்புள்ளி அழைக்கும் தலைஞாயிறு பேரூராட்சி செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.

**2. இந்த அறிவிப்பு ஒப்பந்தப்புள்ளி குறித்த புரிதலுக்கான சுருக்கமான அறிவிப்பு மட்டுமே. ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் Bid Document–இல் ஆங்கில மொழியில் குறிப்பிட்டுள்ளவையே அறுதியானது மற்றும் இறுதியானது.**

3. ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை குறித்து கூடுதல் தகவல் வேண்டுமெனில் அலுவலக வேலை நாட்களில் வேலை நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

4. கட்டுமானத்தின் போது தொல்பொருட்கள்/புதையல் இருப்பின் உடன் தகவல் தெரிவிக்க வேண்டும்.

5. கட்டுமானத்தின் போது கிடைக்கும் மண்/கனிமம் ஆகியவற்றை வேறு இடத்திற்கு கொண்டு செல்லவோ அல்லது விற்பனை செய்யவோ கூடாது.

**செயல் அலுவலர்/ ஒப்பந்தப்புள்ளி**
**அழைப்பு அலுவலர்,**
**தலைஞாயிறு பேரூராட்சி,**
**நாகப்பட்டினம் மாவட்டம்.**

**பெறுநர் :**

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி.

**நகல்:**

1. அலுவலக விளம்பர பலகைக்கு.
2. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம், மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர்அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் அலுவலகம் , மாவட்ட ஆட்சியரகம், தஞ்சாவூர் அவர்களுக்கு தகவலுக்காக
4. இளநிலை பொறியாளர், பேரூராட்சிகள் பிரிவு, வேளாங்கண்ணி தொகுப்பு அவர்களுக்கு தகவலுக்காக.
5. உள்ளுர் மற்றும் வெளியூர் அலுவலகங்களுக்கு விளம்பரத்திற்காக அனுப்பப்படுகிறது.